விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 27 புதன்கிழமை (13.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 298


## வடக்கை சட்டத்தை மதிக்கின்ற
# அமைதியான, பாதுகாப்பான மாகாணமாக மாற்றுவேன்
### வடக்கின் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா



**(யாழ்ப்பாணம்)**

**தமிழர் தாயகப் பிரதேசமான வட மாகாணத்தை சட்டத்தை மதிக்கின்ற, அமைதியான மற்றும் பாதுகாப்பான மாகாணமாக மாற்ற விரும்புவதாக வட மாகாணத்தின் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.**

வடமாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஜீவன் தியாகராஜா, தன்னுடைய எதிர்கால திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து ஊடகமொன்றுக்கு வழங்கிய தொலைபேசியூடான விசேட செவ்வியில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

▶15

## மின்சார கட்டணமும் அதிகரிக்கப்படலாம்

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் நிலக்கரியின் விலை ▶15

## பெற்றோல், டீசல் விலை அதிகரிக்கலாம்

(கொழும்பு)

இலங்கையில் பல பொருட்களுக்கு விலை அதிகரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள. ▶15

## பெரிய வெங்காயத்தின் விலை 200 ரூபாயாக அதிகரிக்கக்கூடும்

(கொழும்பு)

நாட்டில் பொருட்களின் விலை சடுதியாக ▶15

### கறுப்புச் சந்தை முதலாளிகளிடம்
## பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கும் அதிகாரம்
### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தினால் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டபோது, உலகசந்தையில் ஏற்படும் எரிபொருள் விலையதிகரிப்பிற்கு ஏற்றவாறு நாட்டிலும் எரிபொருள் விலை ▶15

## விலை உயர்வுக்கு தீர்வு காணுங்கள்
### நிதியமைச்சர் பசிலுக்கு ஜனாதிபதி கோட்டா உத்தரவு



*(கொழும்பு)*

**அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு தீர்வு காணுமாறு நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் குறித்து ▶15

## விலை உயர்வுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் முறையற்ற அரச நிர்வாகம் உள்ளிட்ட விடயங்களை முன் ▶15



### நாட்டில் மேலும்
## 23 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 23 பேர் இலங்கையில் ஒரே நாளில் உயிரிழந்துள்ளதாக ▶15

## அதிபர், ஆசிரியர் சம்பளத்தை இரு கட்டமாக அதிகரிக்க இணக்கம்
### தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் பிரதமர் மகிந்த

(கொழும்பு)

சம்பளப் பிரச்சினையை முன்வைத்து ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கத்தினர் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு தீர்வாக இரு கட்டமாக சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வி தொடர்ந்து ▶15

### 20ஆம் திகதி
## மதுச்சாலைகள் பூட்டப்படுகின்றன

(கொழும்பு)

எதிர்வரும் 20ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்பட வேண்டும் என கலால் திணைக்கள ஆணையாளர் தெரி ▶15

## நாட்டில் பஞ்சம் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை
### நிதி அமைச்சர் பசில்

(கொழும்பு)

நாட்டில் எந்தவிதத்திலும் பஞ்சம் ஏற்பட இடமளிக்கப் போவதில்லையென நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் உணவு பாதுகாப்பு தொடர்பில் 'விவசாய அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய அமைச் ▶15

### கொரோனாவால்
## வவுனியாவில் இருவர் பலி

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 25 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், இருவர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவி ▶15

### நியூசிலாந்து செல்ல முயன்ற
## வடக்கு இளைஞர்கள் 63 பேர் திருமலையில் கைது

(திருகோணமலை)

கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் நியூசிலாந்து செல்ல முயன்ற 63 பேர் திருகோணமலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த ▶15



கலாநிதி, லயன் சின்னத்தம்பி ஆனந்தராசா அவர்கள் கடந்த புதன்கிழமை 06.10.2021 மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அ. பிறேம்சங்கர் முன்னிலையில் சமாதான நீதிபதியாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இவர் கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் என்பவற்றின் தலைவரும் வள்ளுவன் மேம்பாட்டுக் கழக இயக்குநரும் நல்லூர் லயன்ஸ் கழகம் நல்லூர் பல. நோக்கு கூட்டுறவுச் சங்க பொதுச் சபை, சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம், யாழ். மாவட்ட சர்வமதப் பேரவை என்பவற்றின் உறுப்பினராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடமாகாணத்தில் கொரோனாவால் இதுவரை 783 பேர் உயிரிழந்துள்ளனர்

## வடக்கு சுகாதார பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதத்தில் கொரோனாப் பரவலின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், வடக்கில் இதுவரை 783 பேர் கொரோனாவால் உயிரிழந்ததாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதத்தில் கொரோனாப் பரவலின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

வடக்கில் இதுவரையில் 37, 525 பேருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. ஓகஸ்ட்டில் 14,633 ஆகவும், செப்டம்பரில் 9,414 ஆகவும், ஒக்டோபரில் 942 ஆகவும் தொற்றுப் பரவல் எண்ணிக்கை காணப்படுகின்றது.

அதேபோல, வடக்கில் இதுவரையில் கொரோனாவால் 783 பேர் உயிரிழந்துள்ளனர். ஆகஸ்டில் 228 பேரும், செப்டெம்பரில் 348 பேரும், ஒக்டோபரில் 26 பேரும் உயிரிழந்துள்ளனர்.

எனவே, தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுவதன் மூலமும் கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-03,33)

# ஆரோக்கியமான பிள்ளைகளுக்கு கோவிட் தடுப்பூசி அவசியமில்லை

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

ஆரோக்கியமான உடல் நிலையை உடைய பிள்ளைகளுக்கு கோவிட் தடுப்பூசி அவசியமில்லை என இலங்கையின் சிரேஷ்ட தொற்று நோயியல் நிபுணர்களில் ஒருவரும் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

நாட்பட்ட நோய்களை உடைய மற்றும் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தடுப்பூசி வழங்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

எனினும் உடல் ஆரோக்கியம் மிகுந்த பிள்ளைகளுக்கு அடிப்படை சுகாதார வழிமுறைகளை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்ற வழிகாட்டல்களை வழங்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றதா என்பதனை கண்காணிப்பதற்கு பாடசாலை மட்டத்தில் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார். தடுப்பூசியினால் மரணங்கள் குறைவதுடன், நோய் பாதிப்பு வரையறுக்கப்படுகின்றதே தவிர நோய் பரவுகை கட்டுப்படுத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டு சமூக நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதற்கு மொத்த சனத்தொகையில் 80 வீதமானோருக்கு தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு நோய் நிலைமைகளினால் பாதிக்கப்பட்டோருக்கு ஆண்டுதோறும் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, நாட்டில் கோவிட் பிரச்சினை இன்னும் ஓராண்டு காலம் வரையிலேனும் நீடிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-03)

# அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் தீர்வு

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும் தினத்தில் அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு வழங்கப்படும் வழிமுறை குறித்து நிதி அமைச்சரினால் தெளிவாக அறிவிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட் தொற்றின் காரணமாக நாட்டில் கல்வித்துறை பாரிய பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது. இதனால் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே அதிபர் - ஆசிரியர்களால் பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகிறது.

மாணவர்களின் நலனைக் கருதும் அதேவேளை, அதிபர் - ஆசிரியர்களின் நீண்ட கால சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வினை வழங்குவதற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதற்கமைய ஏற்கனவே தீர்மானித்துள்ளதன் அடிப்படையில் நவம்பரில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவு திட்டத்தின் ஊடாக தீர்வு வழங்கப்படும்.

அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வினை 4 கட்டங்களாக வழங்குவதற்கு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதனை செயற்படுத்தும்போது அது ஜனாதிபதியின் பதவி காலத்திற்கும் அப்பால் செல்லும்.

அத்தோடு அதிபர் - ஆசிரியர்களின் கோரிக்கை நியாயமானது என்பதை நிதி அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனவே நவம்பர் 12 ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது இது தொடர்பில் அவர் தெளிவாக அறிவிப்பதாக இவ்வாரம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்தார்.

அவரால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை 3 கட்டங்களாக நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றார். (ம-03)

# எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தைக்கு தீர்மானம்

## வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

உலக சந்தையில் அதிக விலைக்கு எரிபொருளை கொள்வனவு செய்து, உள்நாட்டில் குறைந்த விலையில் அதனை விநியோகிப்பதற்கான முறைமை இல்லை.

எனவே எரிபொருள் விலை எவ்வாறு எப்போது அதிகரிக்கும் என்பது தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்று, வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பொருட்களை உலக சந்தை விலைக்கு ஏற்ப கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. எரிபொருள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதால் உலக சந்தையில் அதன் விலை உயரும்போது உள்நாட்டிலும் விலை அதிகரிப்பு ஏற்படும்.

அதேபோன்று எரிவாயு, பால்மா, பருப்பு உள்ளிட்டவற்றின் விலைகளும் அதிகரிக்கும். கோவிட் தொற்றின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

முழு உலகும் எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியிலிருந்து ஒரு தீர்வான எம்மால் மாத்திரம் தப்பிக்க முடியாது. எனவே விருப்பமின்றியே பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன.

உலக சந்தையில் அதிக விலைக்கு எரிபொருளை கொள்வனவு செய்து, உள்நாட்டில் குறைந்த விலையில் அதனை விநியோகிப்பதற்கான முறைமை இல்லை.

எனவே எரிபொருள் விலை அதிகரிக்கப்படும். அது எவ்வாறு எப்போது அதிகரிக்கும் என்பது தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்றார். (ம-03)






# விசேட நேர அட்டவணையில் ரயில் சேவைகள் இடம்பெறும்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின்னர் விசேட நேர அட்டவணைக்கு அமைவாகவே ரயில் சேவைகள் இடம்பெறும் என்று தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

ரயில் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான திகதி இதுவரையிலும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றும், போக்குவரத்து அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய ரயில் சேவைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுப் போக்குவரத்து சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து, அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க ஆகியோரின் தலைமையில், நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். (ம-03)

# சவால் நிறைந்த இந்த காலகட்டத்தை அரசின் இறுதிக்கட்டமாக எவரும் கருத வேண்டாம்

## அமைச்சர் டலஸ்

**(கொழும்பு)**

**அரசாங்கத்திற்கு பல தடைகளும் சவால்களும் வந்தாலும் இதனை அரசாங்கத்தின் இறுதிக் காலமாக எவரும் கருதிவிடக்கூடாது என ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.



எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி 2022 நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் முதல் வாசிப்புக்காக பாராளுமன்றில் நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

டிசெம்பர் 10 ஆம் திகதி மாலை 5 மணிக்கு இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

69 இலட்சம் மக்களின் எதிர்ப்பார்ப்பை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாது போனமையை அமைச்சரவை உள்ளிட்ட தனது அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இது சாதாரண ஒரு கருத்தாகும். குறைகள் இருப்பின் அதனை ஏற்றுக் கொண்டு நிவர்த்தி செய்ய நாம் தயாராகவே இருக்கிறோம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள உரத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் இந்த தடைகளைப் பார்த்து எவரும் அரசாங்கத்தின் இறுதிக் காலமாக இதனைக் கருதிவிட வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கிறோம் என மேலும் அவர் தெரிவித்தார். (4-5)

# நாட்டை வந்தடைந்தார் இந்திய இராணுவத் தளபதி

(கொழும்பு)

ஐந்து நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்திய இராணுவப் படைகளின் தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே நாட்டுக்கு வந்துள்ளார்.



இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் அழைப்பின் பேரில் ஐந்து பேர் கொண்ட குழு நேற்று நாட்டிற்கு வந்துள்ளது.

ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே ஆகியோரை சந்திக்க உள்ளார்.

அத்துடன், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, கடற்படை மற்றும் வான் படைத் தளபதிகளையும் இந்திய இராணுவப் படைகளின் பிரதானி சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# எரிபொருள் விலை அதிகரித்தால் பேருந்துக் கட்டணம் அதிகரிக்கும்

## தனியார் பேருந்து சங்கம்

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டால் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படும் என இலங்கை தனியார் பேருந்து சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போதைய காலப்பகுதியில் பேருந்து துறை பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக பேருந்து சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிக்கும் நிலை உள்ளமையினால் எதிர்வரும் நாட்களில் பேருந்து கட்டணத்திலும் திருத்தம் மேற்கொள்ள நேரிடும் என இலங்கை தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதுவரையில் நூற்றுக்கு 30 வீதம் மாத்திரமே பேருந்து இயங்குகின்றது. பேருந்து பாகங்கள் மற்றும் டயர்களின் விலைகள் பாரியளவு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4-5)

# யாழ். மாநகர முதல்வருடன் கனேடியத் தூதுவர் சந்திப்பு



(குப்பிழான்)

யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கினொன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ். மாநகர சபை அலுவலகத்தில் இடம்பெற்றது.

மேற்படி சந்திப்பில் யாழ்ப்பாணத்தின் சமகால நிலைமைகள், யாழ்.மாநகர சபையின் செயற்பாடுகள், யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி, திண்மக் கழிவு முகாமைத்துவம், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நீண்டகாலப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

குறித்த சந்திப்பின் முடிவில் இலங்கைக்கான கனேடியத் தூதுவருக்கு யாழ்.மாநகர சபை முதல்வர் நினைவுச் சின்னமொன்றைக் கையளித்தார். (4-5-18-33-100-104)

# 13 ஐ முழுமையாக நிறைவேற்றிய பின்னரே மாகாணத் தேர்தல் நடத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எதிர்காலத்தில் மாகாண சபைத் தேர்தல் எப்பொழுது நடத்தப்படுவதாக இருந்தாலும் அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக நிறைவேற்றப்பட வேண்டும். அதன்பின்னரே மாகாண சபை தேர்தல்கள் நடத்துவது அர்த்தமுள்ளதாக அமையும் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் மாகாண சபையின் பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபை எங்களுடைய அரசியல் தீர்வாக நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இருக்கக்கூடிய அரசியல் அதிகாரங்களை இழப்பது என்பது சாணக்கியமானதல்ல. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என அரசு அறிவித்துள்ளது.



இந்நிலையில் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட ஒரு மாகாண சபை முறைமையை நாங்கள் ஏற்பதா? அல்லது முற்றுமுழுதாக 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்ட மாகாண சபையை ஏற்பதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கான சரியான நிலைப்பாட்டினை தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் எட்ட வேண்டியது மாத்திரமல்ல வலியுறுத்த வேண்டியதும் கட்டாயமானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# அதிபர், ஆசிரியர் பணிப்பகிஷ்கரிப்பு இன்று கலந்துரையாடி முடிவு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனான கலந்துரையாடல் நிறைவு பெற்ற நிலையில் தமது பணிபகிஷ்கரிப்பை தொடர்வதா? இல்லையா? என்பதை அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடி இன்று தீர்மானிக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் நேற்று தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அலரிமாளிகையில் நேற்று நண்பகல் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

எனினும், தமது சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் அரசாங்கம் வழங்கும் தீர்வினை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகள் கூடி கலந்துரையாடி தீர்மானிக்கவுள்ளதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

சம்பளக் கொடுப்பனவை மூன்று கட்டங்களாக வழங்குவதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார். எனினும், உத்தேச சம்பளத்தை ஒரே தடவையில் வழங்குமாறு தொழிற்சங்க பிரதிநிதிகள் தொடர்ச்சியாக வலியுறுத்திய போதிலும் இரண்டு கட்டங்களாக வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (4-5)

# வெளியேறியது பெங்களூர்

# அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கொல்கத்தா

## இன்று டெல்லியுடன் பலப்பரீட்சை



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் வெளியேற்றுப் போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கான இரண்டாவது தகுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இதன்படி கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, இன்று நடைபெறும் போட்டியில், டெல்லி கெபிடல்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

சார்ஜாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் றோயல் செலஞ்சலர்ஸ் பெங்களூர் அணியும் மோதிக் கொணடன.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் செலஞ்சலர்ஸ் பெங்களூர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 138 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, விராட் கோலி 39 ஓட்டங்களையும் தேவ்தத் படிக்கல் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

கொல்கத்தா அணியின் பந்துவீச்சில், சுனில் நரேன் 4 விக்கெட்டுகளையும் லொக்கி பெர்குசன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 139 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 19.4 ஓவர்கள் நிறைவில், 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் கொல்கத்தா அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சுப்மன் கில் 29 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் மற்றும் சுனில் நரேன் ஆகியோர் தலா 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில், மொஹமட் சிராஜ், ஹர்சல் பட்டேல் மற்றும் யுஸ்வேந்திர சஹால் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 26 ஓட்டங்களையும் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்திய சுனில் நரேன் தெரிவுசெய்யப்பட்டனர்.



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2426

### தனுசியா

அம்மா திட்டியதால் இளம்பெண் கிணற்றில் குதித்து தற்கொலை முயற்சி – செய்தி



அப்படி பார்த்தா நாங்களாம் ஒரு நாளைக்கு மூன்னூறு தடவை கிணத்துல குதிக்கனுமே வீட்ல அம்மாகிட்ட நாங்க வாங்குற திட்டுக்க அரபிக்கடல்ல குதிச்சாலும் பத்தாதே

### கஜேந்திரன்

உங்க பெயின்ற் 10 வருசம் பாவிக்கிதோ இல்லையோ




உங்க வாளி 10 வருசத்துக்கு மேல பாவிக்குது பாத்றாம்ல

### அத்வைதா



மேகம் கருக்குது



மேகம் எங்கம்மா கருக்குது.. அடிக்குற வெயில்ல மூஞ்சி தான் கருக்குது

### சாம்சன்

என்னையா இது ஒரு தோசைக்கு 40 ரூபா பில் போட்டுட்டு இன்னொரு தோசைக்கு 50 ரூபா பில் போட்டிருக்க



முதல்ல சாப்பிட்ட தோசை பழைய சிலிண்டர்ல சுட்டது சார்

### சியானி

விமானத்தில் தமிழர்களுக்கு மது வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.... காரணம்

மது அருந்திய பின்,

அமெரிக்காகாரன் : நான் புத்தகம் படிக்கப் போகிறேன்


சீனாக்காரன் : நான் பாட்டு கேட்கப் போகிறேன்

ஜப்பான்காரன் : நான் தூங்கப்போகிறேன்

தம்மாளு : தம்பி இதுவரை நீ ஓட்டுனது போதும் எழுந்திரு, இனி நான் ஓட்டுறேன்!

### றஜிந்தன்

விலைவாசி என்றால் என்ன?



விலை நமக்கு....!
வாசி அரசாங்கத்துக்கு....!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

13.10.2021
புரட்டாதி 27, புதன்கிழமை
அட்டமி பின்னிரவு 12.14 மணிவரை
பூராடம் பிற்பகல் 2.59 மணிவரை
சுபநேரம் -4.32-6.02 மணிவரை
இராகு காலம் -12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம்- ரோகினி, மிருகசீரிடம் வளவன்

**மேஷம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வெளியூர் பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**மிதுனம்** — சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** — தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

**சிம்மம்** — சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிறப்பான நாள்.

**கன்னி** — பேச்சில் கனிவு பிறக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**துலாம்** — வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** — குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** — மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை கூடும், இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** — இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சமயசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** — சிந்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பணவரவால் சந்தோசப்படுவீர்கள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், முயற்சிகள் கைகூடும்.

**மீனம்** — செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.

நீ கோபப்பட்டால் உனக்கு செலவு அதிகமாகும்.

# பெரும் போகத்துக்கான உரம் இன்று முதல் விநியோகம்

(கொழும்பு)

இன்று முதல், பெரும் போகத்துக்கு தேவையான கரிம / சேதன உரங்களை விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நேற்று, விவசாய அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், அவர் கூறினார்.

இதற்கமைய அம்பாறை, அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கு கரிம உர விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என, அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# ஊழலை அம்பலப்படுத்திய அதிகாரிக்கு வெள்ளை வான் அச்சுறுத்தல்

(கொழும்பு)

வெள்ளைப்பூண்டு ஊழல்-மோசடியை அம்பலப்படுத்திய நுகர்வோர் சேவை அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளர் துஷான் குணவர்த்தன வெள்ளை வான் கும்பலால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

தன்னை அச்சுறுத்தும் வகையில் ஒக்டோபர் 07 ஆம் திகதி வெள்ளை வானில் ஒரு கும்பல் தனது வீட்டுக்கு வந்ததாக கிருலப்பன பொலிஸ் நிலையத்தில் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

வெள்ளைப் பூடு ஊழல்-மோசடிக் குற்றச்சாட்டை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து தனக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் பதவி விலக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாகவும் கூறி துஷான் குணவர்த்தன தனது பதவியை இராஜினாமா செய்தார்.

தனது கடமைகளை சுதந்திரமாகச் செய்ய முடியாதவாறு பல்வேறு அரசியல் ரீதியான அழுத்தங்களை எதிர் கொண்டதாகவும்அவர் கூறினார். (4-5)

# ரவி உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கு 25 வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை மோசடி நடவடிக்கை விவகாரத்தில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 10 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கினை எதிர் வரும் 25ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றின் சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் தீர்மானித்தது.

நேற்று இது குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்குத் தொடுநர் சட்டமா அதிபர் தரப்பினரால் வழக்குடன் தொடர்புடைய ஆவணங்கள், பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளுக்கு கையளிக்கப்பட்டன.

குறித்த ஆவணங்களில் குறைப்பாடுகள் இருக்கிறதா என, அவற்றை ஆராய்ந்து மன்றுக்கு அறிவிக்க பிரதி வாதிகளின் சட்டத்தரணிகளால் கால அவகாசம் கோரப்பட்டது. இதனையடுத்தே அது தொடர்பிலான உறுதிப்படுத்தல்களுக்காக வழக்கை எதிர்வரும் 25 ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுக்க தீர்மானிக்கப்பட்டது. (4-5)

# சிகிச்சையில் சிக்கிய சிமெந்துக்கல்

(கொழும்பு)

நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனைக்குச் சென்ற 56 வயதான நபரின் இதயத்தை சோதனை செய்து பார்த்த மருத்துவர்கள் அவரின் இதயத்திற்கு அருகில் விசித்திரமான பொருள் ஒன்று சிக்கியிருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இந்நிலையில் பலக்கட்ட பரிசோதனைக்கு பின்னர் குறித்த பொருளானது சிமெந்துக் கல் எனவும் இதனால் அவரது இதயத்தில் ஒரு துளை ஏற்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் "சில வருடங்களுக்கு முன்பு அவருக்குச் செய்யப்பட்ட கைபோபிளாஸ்டி சிகிச்சையில், முதுகெலும்பில் ஒரு சிறப்பு வகை சிமெந்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

மேலும் இக் கூர்மையான துண்டே நரம்புகள் வழியாகச் சென்று அந்நபரின் இதயச் சுவரில் துளையினை ஏற்படுத்தியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஒரு சிக்கலான அறுவை சிகிச்சைக்குப் பின்னர் இதயத்தில் இருந்து அக்கல் அகற்றப்பட்டது. (4-5)



பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரும், முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன் சுவாமி, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்றுக்காலை வந்தடைந்தார்.

# 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி மீண்டும் இன்று ஆரம்பம்

## வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் இதுவரை கொவிட் தொற்றுக்கு உள்ளாகி இறந்த 60 வயதுக்கு மேற்பட்டோரில் 94.3% ஆனோர் நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களாவர். எனவே 60 வயதிற்கு மேற்பட்ட நாட்பட்ட நோய் உள்ளவர்கள் கட்டாயமாக கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கொவிட்-19 தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் 2020 மார்ச் மாதம் முதல் 2021 ஒக்டோபர் 9 ஆம் திகதி வரை கொவிட் தொற்றுக்கு உள்ளாகி இறந்தவர்களில் 77.1% ஆனோர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர்.

இந்நிலையில் மேலதிகமாக கொவிட் - 19 தொற்றினால் வயது வந்தவர்கள் இறப்பதைத் தடுப்பதற்கு எமக்கு முன்னால் உள்ள ஒரே ஒரு உபாயம் தடுப்பூசிகளை அதிகளவு பெற்றுக் கொடுப்பதுவே. ஆனால் வருந்தத்தக்க வகையில் யாழ்ப்பாணத்தில் இன்னமும் கணிசமான வயது வந்தோர்கள் இத் தடுப்பூசியினை பெறாது உள்ளனர்.

அதற்கான காரணங்களில் 60 வயதிற்கு மேற்பட்ட பலரிடம் காணப்படும் தவறான அபிப்பிராயம்.

நாட்பட்ட நோய்கள் இருப்பவர்கள் இத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர்.

உண்மையில் நாட்பட்ட நோய் உள்ளவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்படும்போது நோயின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதுடன் இறப்புகளும் அதிகமாக ஏற்படும்.

எனவே யாழ்.மாவட்டத்தில் இதுவரை கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கும் விசேட செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது. அரசாங்க அதிபரின் வழிகாட்டலுடன் பிரதேச செயலர்கள் மற்றும் பிரதேச செயலக



உத்தியோகத்தர்களின் உதவியுடன் இதுவரை கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத 60 வயதிற்கு மேற்பட்டவர்களுடைய பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு இன்று 13 ஆம் திகதி புதன்கிழமை முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை வரை தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் தொடர்பான விபரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியினால் அறிவிக்கப்படும். தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்கு அழைத்துவர முடியாத நோய் வாய்ப்பட்டுள்ளவர்கள் தமது பிரதேச குடும்ப நல உத்தியோகத்தர், பொதுச் சுகாதார பரிசோதகர், கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்வதன் மூலம் தமது வீடுகளிலேயே இத்தடுப்பூசியினை பெற்றுக் கொள்வதற்குரிய ஏற்பாட்டினை செய்து கொள்ளலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். (7-5-33)




உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை தபாலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பருத்தித்துறை தபாலதியர் அ.அருளானந்தசோதி மற்றும் உதவித் தபாலதியர்கள், அஞ்சலர்களைப்படத்தில் காணலாம்.

# அரசாங்கம் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து வருகிறது

## பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன்

(யாழ்ப்பாணம்)

வினைத்திறனோடு செயற்படுவோமென ஜனாதிபதி கூறினாலும் அவ்வாறு நடக்கும் என தான் நம்பவில்லை எனப் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். அத்தோடு அரசாங்கத்திற்கான எதிர்ப்புக்கள் அதிகரித்து செல்வதாகவும் இது மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துமெனவும் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய நகர்வுகள் குறித்து நேற்றையதினம் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய நிலையிலே இந்த அரசாங்கம் மக்கள் மத்தியில் மிகப்பெரிய அளவில் செல்வாக்கு இழந்து வருகின்றது. காரணம் விலை வாசி உயர்வு, சரியான முறையில் ஆட்சி நடைபெறவில்லை என்ற




எண்ணப்பாடு ஆகும். ஆரம்ப காலங்களில் அரசு மிக வும் திறமையாகச் செயற்பட்டு கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் முன்மாதிரியாக இருந்தாலும் அண்மைக் காலங்களில் பின்னடைவான நிலையிலேயே காணப்படுகின்றது.

அதே நேரத்தில் தடுப்பூசி போடப்படுவதில் மூன்றாம் உலக நாடுகளைப் பார்க்கின்றபொழுது இலங்கை முன்னணியில் இருக்கின்றது. ஆனால் இரவோடிரவாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்துவது என்பது மக்கள் வாழ்வதற்கு கஷ்டமான மிக நெருக்கடியான நிலையை ஏற்படுத்தும்.

அரசாங்கத்திற்கான எதிர்ப்புக்கள் கூடிக்கொண்டே போகின்றன. இது மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். தமிழ் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை அரசியல் தீர்வு, பொருளாதாரப் பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் சாத்கமான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவினை வழங்குவது இந்த அரசாங்கம் சிறைக் கைதிகளையாவது விடுவிக்க முடியும். அதற்கான நடவடிக்கை எடுப்பேன் என்று ஐ.நாவில் ஜனாதிபதி கூறினார்.

அந்த நடவடிக்கைகளை துரிதமாக செய்ய வேண்டும். அனைவரையும் விடுவிப்பதற்கான முழுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார். (7-5-33)

# இரத்ததான முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட திரிசாரணர் குழாமினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாமானது இன்றைய தினம் கொட்டடி முத்தமிழ் வீதியிலுள்ள மூவேந்தர் சர்வோதய சிரமதான சங்கத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரைநடைபெறும்.(7-5-18)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.மதுசூதனக் குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (7-5)

# வெள்ளைப்பூடு விவகாரம்
## சதொச பிரதிப் பொது முகாமையாளர் உட்பட நால்வர் கைது

(கொழும்பு)

சதொச நிறுவனத்திற்கு சொந்தமான வெள்ளைப்பூடு அடங்கிய இரண்டு கொள்கலன்களை பிறிதொரு தரப்பினருக்கு வழங்கிய குற்றச்சாட்டில் லங்கா சதொச நிறுவனத்தின் நான்கு ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சதொசவின் பிரதிப் பொது முகாமையாளர் உள்ளிட்ட நான்கு ஊழியர்களும் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்களை நேற்று வெலிசறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நாளை 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (4-5)

# பொதுமக்களின் நடவடிக்கை திருப்திகரமானதாக இல்லை
## பேராசிரியர் அர்ஜுன த சில்வா

(கொழும்பு)

**தனிமைப்படுத்தல் சட்டத்தில் இருந்து நாடு விடுவிக்கப்பட்டதன் பின்னர் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை. இந்த நிலை தொடர்ந்தால் கொரோனாக் கொத்தணி மீண்டும் ஏற்படும் அபாயம் இருக்கின்றது என ராகம மருத்துவ பீட சிரேஷ்ட பேராசிரியர் மருத்துவர் அர்ஜுன த சில்வா தெரிவித்தார்.**

மக்களின் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் கொவிட் அச்சுறுத்தல் முற்றாக நீங்கவில்லை. அதனால் மக்கள் முகக்கவசம் அணிவது தொடர்பாக அவதானமாக இருக்கவேண்டும்.

அதேபோன்று ஒன்றாக கூடி இருந்து சாப்பாடு, பானங்களை எடுத்துக்கொள்வது மற்றும் குளிரூட்டப்பட்ட இடங்களை முடிந்தளவு தவிர்த்துக் கொண்டு செயற்படுதல் போன்ற சுகாதாரப் பழக்கங்களைத் தொடர்ந்து பின்பற்றி வரவேண்டும்.



அத்துடன் தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கப்பட்டு நாடு திறக்கப்பட்ட பின்னர் மக்களின் சுகாதார நடவடிக்கைகள் திருப்தியடையும் வகையில் இல்லை.

இந்த நிலை தொடர்ந்தால் கொரோனாக் கொத்தணி மீண்டும் ஏற்படும் அபாயம் இருக்கின்றது. அதனால் மக்கள் மிகவும் அவதானமாகவும் பொறுப்புடனும் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று 18 முதல் 30 வயது வரையானவர்களுக்கான கொவிட் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# அசாத் சாலியின் உரிமை மீறல் மனுவை ஏற்றது உயர்நீதிமன்று



(கொழும்பு)

கைது மற்றும் தடுத்து வைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி சார்பில், தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்பதாக உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

மிக நீண்ட பரிசீலனைகளின் பின்னர், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான நீதியரசர்களான எஸ். துறைராஜா, யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய நீதிய ரசர்கள் குழாம் மனுவை விசாரணைக்கு ஏற்று உத்தரவு பிறப்பித்தது. (4-5)

# 8 பெண்களில் ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய்

(கொழும்பு)

இலங்கையில் எட்டு பெண்களில் ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பதாக புற்று நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் ஹசந்தி ஜயலத் தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கைப் பெண்களில் 27 வீதமானவர்களுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதுடன் புதிய புள்ளிவிபரங்களின் படி மார்பகப் புற்றுநோயுடன் கூடிய 4 ஆயிரத்து 500 பெண்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

45 வயது முதல் 65 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கே அதிகளவில் மார்பகப் புற்றுநோய் ஏற்படுகிறது.

இது சதவீதத்தின் அடிப்படையில் 100 இற்கு 70 வீதமாகும் எனவும் ஹசந்தி ஜயலத் தெரிவித்துள்ளார். (4-5)


## கிருஸ்ணா அடைவுகடை
## பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2020 ஆம் ஆண்டு 31.08.2020 முதல் 31.12.2020 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி (15.11.2021)இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 15.11.2021 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு: 2020 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

370, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
021 4900311 (C-2811)

உரிமையாளர்
09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046



## மணிவிழா வாழ்த்து




திரு.
காசித்தம்பி
கந்தசாமி
S.L.P.S-I

கல்விப் புலத்தில்
ஆசிரியப்பணி :-
20.03.1990-18.07.2002
அதிபர்பணி :-
19.07.2002-12.10.2021

யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி 13.10.2021 இல் மணிவிழாக் காணும் அதிபரை மனமார வாழ்த்துகின்றோம். (C-2810)

தென்மராட்சி அதிபர் சங்கம்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



J/80 பெரிய கடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் J/80 பெரிய கடை மகளிர் விவகார குழு தலைவி

திருமதி வரதராஜன் சசிரேகா

06.10.2021 அன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம் பெற்று சத்தியப்பிரமாணம் செய்தார். இவரை நாங்கள் மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(8219) J/80 பெரிய கடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும்
J/80 பெரிய கடை மகளிர் விவகார குழு அங்கத்தவர்கள்

# ஆயுதங்களை அதிகரிப்பது தற்காப்புக்காக மட்டுமே போரைத் தொடங்குவதற்காக அல்ல

## வடகொரிய ஜனாதிபதி



(பியாங்யாங்)

**தென்கொரியாவின் ஆயுதக் குவிப்பும் அமெரிக்காவின் விரோதக் கொள்கைகளுமே தமது ஆயுத மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குக் காரணம் என வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனத்தின் "சுய பாதுகாப்பு 2021" எனும் பாதுகாப்புக் கண்காட்சியைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் யாருடனும் போரிட விரும்பவில்லை. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் போரைத் திணித்தால் அதனை எதிர்கொள்ளும்நோக்குடனும்ஆயுத பலத்தை அதிகரித்து வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் வடகொரியாவிற்கும் தென்கொரியாவிற்கும்இடையே அமெரிக்காவே பதற்றத்தை ஏற்படுத்துவதாகவும் கிம் ஜாங் உன் குற்றம் சாட்டினார்.

அண்மைய வாரங்களில் வடகொரியா நீண்ட தூர கப்பல் ஏவுகணை, ரயிலில் இருந்து ஏவும் ஏவுகணை மற்றும் ஹைப்பர் சோனிக் என அடுத்தடுத்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தியது.

கொவிட்-19 தொற்றுப் பரவலை தடுப்பதற்காக எல்லைகளை வடகொரியா மூடியுள்ளதால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் தன் மீதான தடைகளைத் தளர்த்துவதற்கான ஒரு உபாயமாகவும் வடகொரியா ஆயுத பரிசோதனைகளை அதிகரித்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-5)

## பயணிகளுடன் ஆற்றில் விழுந்த பேருந்து 13 பேர் பரிதாபமாகப் பலி


(பீஜிங்)

வடக்கு சீனாவின் ஹீபெய் மாகாணத்தின் ஷிஜி யாஜூவாங் நகரத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேருந்து ஒன்று ஆற்றில் வீழ்ந்துள்ளது.

அதில் இருந்த 51 பயணிகளில் 13 பேர் உயிரிழந்துள்ளதோடு, ஒருவர் காணாமல் போயுள்ளனர். 37 பேரை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர்.

அண்டை மாகாணமான சாங்ஷியில் பலத்த மழையால் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. அப்பகுதியில் 17 இலட்சத்து 60 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (7-5)

## புற்றுநோயால் பாதித்த பெண்ணின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றிய வைத்தியக்குழு



(சிங்கப்பூர்)

இறக்கும் நிலையில் இருந்த புற்றுநோயாளி பெண்ணின் கடைசி ஆசையை சிங்கப்பூர் மருத்துவர்கள் குழு, நிறைவேற்றியுள்ளது. தமிழகத்தின் திருச்சியைச் சேர்ந்த ராஜேஸ்வரி, கணவர் ராஜகோபாலுடன் சிங்கப்பூரில் வசித்து வந்தார்.

ராஜேஸ்வரிக்கு தொண்டை புற்றுநோய் ஏற்பட்டது. நோய் முற்றியதை அடுத்து, திருச்சியில் உள்ள உறவினர்களிடம் வளரும், தன் 12 மற்றும் 9 வயது மகன்களை காண விரும்பினார். கடந்த ஆண்டு கொரோனாக் கட்டுப்பாடு காரணமாக இந்தியாவுக்கு சில விமானங்களே இயக்கப்பட்டு வந்த நிலையில், ராஜேஸ்வரி சிகிச்சை பெற்று வந்த டன் டாக் செங் மருத்துவமனை, வெளியுறவு துறை அமைச்சகங்களிடம் பேசி, அவரை இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தது.

புறப்படுவதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்தான், அவருக்கு அனுமதி கிடைத்தது.

கடைசி நேரத்தில் அனுமதி கிடைத்ததால் விமானத்தில் இடம் கிடைக்கவில்லை. இந்நிலையில் சக பயணிகள் மனமிரங்கியதால் இடம் கிடைத்தது.

இந்தியா வந்து மகன்களைப் பார்த்த சந்தோசத்தில், இரு வாரங்களில் அவர் இறந்து விட்டார். அதற்கு உதவிய டன் டாக் செங் மருத்துவமனைக்கு என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளேன் என இராஜேஸ்வரியின் கணவர் கூறினார். (7-5)

## பிரேசில் ஜனாதிபதிக்கு கால்பந்தாட்ட மைதானத்தில் அனுமதி மறுப்பு



(பிரேசிலியா)

கொரோனா வைரஸ் சாதாரண காய்ச்சல் போன்றதே எனக் கூறிவரும் பிரேசில் ஜனாதிபதி ஜெயீர் போல் சனரோ வைரஸ் பரவலை கட்டுப்படுத்த ஊரடங்கை அமுல்படுத்துவது, தனிமைப்படுத்துதல் மற்றும் முகக்கவசம் அணிவது போன்ற தற்காப்பு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.

அதேபோல் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ளவும் மறுத்து வருகிறார்.

இந்த நிலையில் பிரேசிலின் சா பாலோ நகரில் குடும்பத்தோடு விடுமுறையை கொண்டாடி வரும் ஜனாதிபதி ஜெயீர் போல் சனரோ உள்நாட்டு அணிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டியை பார்ப்பதற்காக அங்குள்ள மைதானத்துக்கு சென்றார்.

ஆனால் மைதானத்தில் இருந்த அதிகாரிகள் ஜெயீர் போல் சனரோ கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை என்பதால் அவரை மைதானத்துக்குள் அனுமதிக்க மறுத்து விட்டனர்.

இது குறித்து அவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில்,

"எதற்கு தடுப்பூசி சான்றிதழ். நான் கால்பந்து விளையாட்டைப் பார்க்க விரும்பினேன், அதற்கு தடுப்பூசி போட வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

அது ஏன்? தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களை விட எனக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது" எனக் கூறினார். (7-5)

## சிரியா முகாம்களில் உள்ள கனேடியர்களை மீட்டு அழைத்துவரக் கோரி வழக்கு

(ஒட்டோவா)

சிரிய அகதிகள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் உறவினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களான 26 கனேடியர்களை மீட்டு நாட்டுக்கு அழைத்து வர மத்திய அரசு நடவ்டிக்கை எடுக்குமாறு உத்தரவிடக் கோரி கனேடிய நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கனேடியர்களை மீட்க நடவடிக்கை எடுக்காததன் மூலம் குடியுரிமை சட்டம், கனேடிய உரிமைகள், சுதந்திரம் மற்றும் குழந்தை உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாட்டின் சில விதிகளை மத்திய அரசு புறக்கணித்ததாக 11 குடும்பங்கள் சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கனேடியப் பிரஜைகளாக 14 சிறுவர்கள், 08 பெண்கள் மற்றும் 04 ஆண்கள் சிரியாவில் உள்ள அல்-ஹோல் மற்றும் அல்-ரோஜ் சிறை முகாம்கள் மற்றும் வடகிழக்கு சிரியா முழுவதும் உள்ள ஹசக்கா, கமிஷ்லி மற்றும் டெரிக் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். (7-5)

# மன்னார் மற்றும் மடு கல்வி வலய பாடசாலைகளை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்க நடவடிக்கை

## மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்

**(மன்னார்)**

**மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாடசாலைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்றைய தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகள் 2588 மாணவர்களைக் கொண்டதாகவும், மன்னார் வலயத்தில் 46 பாடசாலைகள் 3784 மாணவர்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்ற போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெளிவுபடுத்தினார். மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்து தொடர்பாக அரச மற்றும் தனியார் போக்குவரத்து துறையினருடன் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் யாழ்ப்பாணம், மற்றும் வவுனியாவில் இருந்து மன்னாரிற்கு வருகின்ற ஆசிரியர்களுக்காக விசேட போக்குவரத்து சேவை ஒன்றையும் ஆரம்பிக்க உள்ளமை குறித்தும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயணம் செய்வதற்கு முறையான போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு அரச, தனியார் போக்குவரத்து துறையினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். இக் கலந்துரையாடலில் மன்னார், மடு வலயக் கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பொலிஸ் அதிகாரி, ஆகியோர் கலந்து கொண்டனர். (7-5-285)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுகளில் 64 ஆவது படைப்பிரிவினால் தனது படைப்பிரிவு பகுதியில் மக்களின் நலன்கருதி சுமார் பத்து இலட்சம் பெறுமதியான குடிநீர் திட்டங்களும் பல்வேறு கொடையாளர்களால் வழங்கப்பட்ட 60 இலட்சம் பெறுமதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட நான்கு நிரந்தர வீடுகளும் நேற்று கையளிக்கப்பட்டுள்ளன.

(படம் : தவசீலன்)

# கயிறு திரிக்கும் சுய தொழில் முயற்சியை ஊக்குவிக்க நடவடிக்கை

## பாராளுமன்ற உறுப்பினர் திலீபன்



(குருமன்காடு)

நந்திமித்திரிகம கிராமத்தில் கயிறு திரிக்கும் சுய தொழில் முயற்சியாளர்களை மேலும் வலுப்படுத்தி ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் நந்திமித்திரிகம கிராமத்திற்கு விஜயம் செய்த மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அங்குள்ள மக்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்து கொண்டதுடன், குறித்த கிராமத்தில் கயிறு திரிக்கும் சுய தொழில் முயற்சியாளர்களையும் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கம் கிராமிய பொருளாதாரம் மற்றும் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இங்குள்ள மக்கள் கயிறு திரிக்கும் சுய தொழில் முயற்சியில் ஈடுபடுகின்றமை சிறப்பான விடயம். இக் கயிறு திரிக்கும் செயற்பாட்டை நவீன வசதியுடன் கூடியதாக மாற்றுவதற்கு தேவையான இயந்திர சாதனங்களைப் பெற்றுத் தருவதற்கும், அவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் மூலம் பலர் இதில் தொழில் வாய்ப்புக்களையும் பெறக் கூடிய நிலை உருவாகும் எனத் தெரிவித்தார். (7-5-250)

# இறங்குதுறை ஒன்றினை அமைத்துத் தாருங்கள்

## கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை தென் கடற்பகுதியில் இறங்குதுறை ஒன்றை அமைத்து தர வேண்டும் என்ற கோரிக்கையைப் பிரதேச கடற்தொழிலாளர்கள் முன்வைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனை மற்றும் கல்முனைப் பகுதியில் அதிகளவான குடும்பங்கள் கடற்தொழிலை வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக கௌதாரிமுனை பகுதியில் தென் கடல் பகுதியில் ஆழ் கடல் தொழிலுக்கு செல்ல கூடிய பகுதியாக காணப்படுவதனால் குறித்த பிரதேசத்தில் படகுத்துறை ஒன்றை அமைத்து தருமாறு அப்பகுதி கடற்தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-5-315)



இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழினைச் சேர்ந்தவர்களது 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று பிரம்படி பகுதியில் அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு உறவினர்களால் ஈகைச்சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

(படம் : கஜிந்தன்)

# புதிதாக நிர்மாணிக்கப்பட்டும் இயங்காத இரு சந்தைகள்

## வர்த்தகர்கள் குற்றச்சாட்டு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு மீள் குடியமர்வைத் தொடர்ந்து மாந்தை கிழக்குப்பிரதேச சபைக்குட்பட்ட பொன்னகர் பொதுச்சந்தையும் பாண்டியன்குளம் பொதுச்சந்தையும் பல மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை பொன்னகர் சந்தையின் மாதாந்த வரியினை குறித்த வர்த்தகர்கள் செலுத்தி வருவதாகவும் சந்தையின் துப்பரவுப் பணிகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் பல்வேறு தரப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன. இரண்டு சந்தைகளுக்கும் ஒரு கிலோ மீற்றருக்கு உட்பட்ட பகுதிகளில் வர்த்தக நிலையங்களில் மரக்கறி விற்பனைகளும் பொது இடங்களில் மீன் இறைச்சி போன்ற விற்பனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இரண்டு சந்தைகளையும் இயங்க வைப்பதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-5-315)


# வவுனியா வர்த்தக நிலையங்களில் பொலிஸார் திடீர் சோதனை

(குருமன்காடு)

சுகாதார நடைமுறைகள் குறித்து வவுனியா நகரையண்டிய பகுதிகளில் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்ததுடன், 10 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். கொவிட் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் சுகாதாரப் பிரிவினரின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக பொலிஸார் விசேட நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில், வவுனியா புகையிரத நிலைய வீதி, குருமன்காடு ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்த பொலிஸார் முகக்கவசம் அணியாது வர்த்தக நிலையங்களில் பணிபுரிந்தோர், முகக்கவசத்தை சீராக அணியாதோர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர். இதன்படி 10 வர்த்தகர்களுக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வவுனியா நீதிமன்றில் முற்படுமாறும் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (7-5-250)

# அச்சுத் தொழில்துறை காகித இறக்குமதிக்கும் விரைவில் கட்டுப்பாடு?



(கொழும்பு)

பத்திரிகைகள் உள்ளிட்ட அச்சு தொழில்துறைக்கு அவசியமான காகிதங்களை இறக்குமதி செய்வது, எதிர்வரும் வரவு- செலவுத் திட்டம் ஊடாக கடும் இறக்குமதி கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காகித இறக்குமதியை அத்தியாவசியமற்ற பொருட்கள் பட்டியலில் சேர்த்து இவ்வாறு கடும் இறக்குமதி கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பில் நிதி அமைச்சு கலந்துரையாடி வருவதாக நம்பகரமான தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

இவ்வாறான நிலையில் வர்த்தகர்கள் பெருமளவு காகிதங்களை இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், காகிதங்கள் இறக்குமதிக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால், அது பத்திரிகை அச்சுத் தொழில் துறையை மிக மோசமாகப் பாதிக்கும் என அவதானிகள் எச்சரிக்கின்றனர். (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## நன்மைகளை வாரி வழங்கும் நவராத்திரி 7 ஆம் நாள்



மனிதன் படிப்படியாக உயர்ந்து தெய்வ நிலையை அடைவதையே இந்த கொலு உணர்த்துகிறது.

பெண்கள் விரதம் இருந்து காலையிலும், மாலையிலும் நீராடி பூஜை செய்ய வேண்டும். கன்னி பெண்களை இந்தக் காலத்தில் தேவியின் ஒன்பது அம்சமாக பாவித்து ஆராதிப்பது விசேஷம்.

அவர்களுக்கு அவர்கள் சக்திக்கு ஏற்றப்படி ரவிக்கை துணி, மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு வைத்து கொடுக்க வேண்டும். நவராத்திரி முதல் மூன்று தினங்கள் துர்க்கை, அடுத்த மூன்று நாட்கள் லட்சுமி, கடைசி மூன்று நாட்களில் சரஸ்வதியை பூஜிப்பது ஐதீகம்.

பத்தாவது நாள் விஜயதசமியன்று பூஜையை பூர்த்தி செய்ய வேண்டும்.

தினமும் லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் செய்து ஏதாவது நைவேத்தியம் செய்ய வேண்டும். இரண்டு வேளைகளிலும் விளக்கேற்றி ஆரத்தி எடுக்க வேண்டும்.

ஒன்பதாவது நாள் சரஸ்வதி பூஜையன்று சரஸ்வதி படத்திற்கு சந்தனம், குங்குமம் இட்டு மாலை சாத்தி புது ரவிக்கை துண்டு சாத்த வேண்டும்.

புத்தகங்களையும், ஆயுதங்களையும் அடுக்கி வைத்து கலைமகளை வழிபட வேண்டும். சரஸ்வதி அஷ்டோத்திரத்தை படித்து பூஜை செய்ய வேண்டும். இதன் பிறகு படிக்கக்கூடாது. மறுநாள் புனர் பூஜை செய்தபின் பூஜையில் இருந்து புத்தகத்தை எடுத்து படிக்க வேண்டும்.

நவராத்திரி தினங்களில் ஊசி, நூல் கொண்டு தைத்தல், வீட்டை ஒட்டடை அடித்தல் இவைகளை செய்யக் கூடாது. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஒட்டமாவடியில் இதுவரை 3113 சடலங்கள் நல்லடக்கம்

(ஏறாவூர்)

கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது சடலங்கள் மட்டக்களப்பில் உள்ள ஒட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முன்தினம் மேலும் நான்கு பேரின் சடலங்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதையடுத்து அங்கு இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ள கொவிட்-19 சடலங்களின் எண்ணிக்கை 3113 ஆக அதிகரித்துள்ளது. (4-5)

## தடம்புரண்டது எரிபொருள் கொள்கலன் வாகனம்

(திருமலை)

திருகோணமலையில் அமைந்துள்ள இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திலிருந்து எரிபொருள் ஏற்றிச்சென்ற எரிபொருள் கொள்கலன் வாகனம் ஒன்று நேற்று அதிகாலை கப்பல்துறை எனும் பகுதியில் விபத்துக்குள்ளானது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான குறித்த வாகனமானது, வீதியின் அருகிலுள்ள பாலம் ஒன்றினையும் உடைத்துக்கொண்டு திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் தடம்புரண்டுள்ளது.

விபத்தில் குறித்த வாகனத்தில் பயணித்த சாரதி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5)

## இணையத்தளத்தை பாதுகாக்க புதிய சட்ட மூலங்கள்

(கொழும்பு)

இணையத்தளப் பாதுகாப்பு தொடர்பில் இரண்டு சட்ட மூலங்களைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு குறித்த இரண்டு சட்டமூலங்களைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 120 | 150 |
| தக்காளி | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 60 | 60 | 50 |
| கோவா | 160 | 150 | 150 | 150 |
| கரட் | 100 | 170 | 180 | 140 |
| பூசணி | 60 | 70 | 60 | 80 |
| புடோல் | 140 | 140 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 240 | 180 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 140 | 180 |
| பாகற்காய் | 400 | 600 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 110 | 130 | 120 |
| பயற்றங்காய் | 300 | 250 | 250 | 280 |
| லீக்ஸ் | 170 | 200 | 240 | 250 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 180 | 300 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 200 | 280 | 300 | 240 |
| போஞ்சி | 240 | 350 | 400 | 350 |
| கத்தரிதம்புள்ள | 160 | 180 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 90 | 90 | 50 | 80 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60-70 | 50-70 |
| இராசவள்ளி | -- | 300 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 380 | -- | 200 |
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | -- | 120 |

# பாரிய உணவுத் தட்டுப்பாட்டை அடுத்தாண்டு மக்கள் எதிர்கொள்வர்

## ஐ.தே.க.ஆருடம்

(கொழும்பு)

**நாட்டில் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசாங்கம் எவ்வித நோக்கமும், திட்டமும் இன்றி நாட்டை ஆட்சி செய்வதனால் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



காலி மாவட்டத்தில் தேயிலை தொழிற்துறைகளில் ஈடுபடுவோர் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

உரத் தட்டுப்பாடு காரணமாக தேயிலை செய்கை வழமைக்கு திரும்ப இன்னும் ஒன்றரை ஆண்டுகள் தேவைப்படும். தரமான உரத்தை 350 ரூபாவிற்கு வழங்க முடியாது. அரசாங்கம் ஆட்சியை பிடிக்கும் நோக்கில் பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்திருந்தது.

தரம் குறைந்த உர வகைகளைப் பயன்படுத்துவதனால் மண் வளம் இழக்கும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் அடுத்த ஆண்டு நடுப்பகுதி அளவில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை மக்களுக்கு ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (4-5)

---

## இலங்கை வந்த சுற்றுலாப் பயணி

# பயணக் கட்டுப்பாடு காரணமாக 5 மணி நேரத்தில் நாடு திரும்பினர்

### விசாரணை நடத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வந்த அமெரிக்க சுற்றுலாப் பயணி ஒருவர் சிரமத்திற்குள்ளாகி திரும்பிச் சென்ற சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

சுமார் 7 முதல் 8 நாட்கள் சுற்றுலாவாக இலங்கைக்கு வந்த ஒரு வெளிநாட்டவர் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டில் பேருந்துகள் மற்றும் ரயில்கள் இயக்கப்படாததால் 5 மணி நேரத்திற்குள் திரும்பிச் சென்றதாக கூறியிருந்தார்.

போக்குவரத்து அல்லது ஹோட்டல் வசதிகள் இல்லாததால் அவர் கடுமையான சிரமத்திற்கு ஆளானதாகவும் தன்னால் அவரது பயண நிறுவனத்தை தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

அத்தோடு நாடு சுற்றுலாப் பயணிகளுக்கு திறந்திருக்கும் என்று அதிகாரிகள் கூறினாலும் வசதிகள் இல்லாததால், இலங்கை இன்னும் முடக்க நிலையில் உள்ளது என வீடியோ ஒன்றினை வெளியிட்டு அந்த சுற்றுலாப் பயணி கூறியிருந்தார்.

இருப்பினும் அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் இந்த சம்பவம் குறித்து ஏற்கனவே விரிவான விசாரணை நடைபெற்று வருவதாக சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (4-5)

---

# வலுவான கூட்டாண்மையை மீண்டும் உறுதிப்படுத்திய ரஷ்யா- இலங்கை

(கொழும்பு)

இலங்கையும் ரஷ்யாவும் தங்களது வலுவான கூட்டாண்மையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. மொஸ்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இரண்டு நாடுகளும் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தின.

இலங்கை மற்றும் ரஷ்யக் கூட்டமைப்புக்கு இடையிலான 10 ஆவது சுற்று இரு தரப்பு அரசியல் ஆலோசனைகள் மொஸ்கோவில் உள்ள ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகத்தில் நடைபெற்றன.

இந்த ஆலோசனைக்கு இலங்கையின் வெளியுறவு செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே மற்றும் ரஷ்யாவின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் தூதர் இகோர் மோர்குலோவ் ஆகியோர் தலைமை தாங்கினர்.

சந்திப்பின் போது, இலங்கை மற்றும் ரஷ்யா இடையே அரசியல், பொருளாதார மற்றும் கலாசார துறைகள் தொடர்பில் பேசப்பட்டன. (4-5)

---

# இன்று ஒரு தகவல்

## அதிர்ஷ்டம் இல்லையா?

என்னை விடச் சுமாராகப் படித்தவர்கள் எல்லோரும் பாஸாகி விட்டார்கள். நான் மட்டும் பெயிலாகி விட்டேன். நான் துரதிர்ஷ்டக்காரன்.

என் நண்பனுக்கு என்னைவிடத் தகுதிகள் குறைவு. ஆனால் அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது. எனக்குக் கிடைக்கவில்லை. நான் அதிர்ஷ்டக்கட்டை.

அந்த டிசைன் எனக்குப் பிடித்திருந்தது. நான் வாங்குவதற்குள் விற்றுத் தீர்ந்து விட்டது. எனக்கு அதிர்ஷ்டமில்லை என்று இப்படியெல்லாம் தம்மைத்தாமே தாழ்த்திக் கொள்ளும் மனிதர்களை நாம் தினமும் சந்திக்கத் தான் செய்கிறோம்.

மற்றவர்களைப்பற்றிக் கவலை கொள்ளாமல் கடுமையாகப் படித்துப் பரீட்சை எழுதியிருந்தால் முதலாமவர் நிச்சயம் பாஸாகியிருப்பார்.

நண்பனுக்கு முன்னதாக விளம்பரத்தைப் பார்த்து மனுப்போட்டு முயற்சி மேற்கொண்டிருந்தால் இரண்டாமவருக்கு நிச்சயம் வேலை கிடைத்திருக்கும்.

உடனே பணத்தைப் புரட்டிக் கடைக்குப் போயிருந்தால் அந்தச் சேலையோ சட்டையோ மூன்றாமவருக்கு கிடைத்திருக்கும்.

இந்த மூன்று உதாரணங்களிருந்து என்ன தெரிகிறது? அதிர்ஷ்டம் என்பது உழைப்பு அல்லது முயற்சியைத் தவிர வேலை இல்லை என்றல்லவா?

அப்படியென்றால் அதிர்ஷ்டம் என்ற சொல்லின் உண்மையான பொருள் என்ன? 5 இலட்சம் லொட்டரிச் சீட்டுகள் விற்கப்படுகின்றன என்றால் அவற்றுள் ஒருவருக்குத்தான் இலட்ச ரூபாய் கிடைக்கும். லொட்டரிச் சீட்டு வாங்குவதோடு நம் பணி முடிந்து விடுகிறது. பரிசு விழுவதோ விழாமல் போவதோ ஒரு விபத்தைப் போன்றது. அதிர்ஷ்டம் என்பதற்கு இதுதான் சரியான உதாரணம். இது நம் கையில் இல்லை.

ஆனால் நம்மை நாமே துரதிர்ஷ்டசாலிகளாக்கிக் கொள்கிறோமே அதைப்பற்றித் தான் இப்போது குறிப்பிடுகிறேன்.

தமக்கு அதிர்ஷ்டமில்லை என்று சிலர் எண்ணிக் கொண்டு எந்த முயற்சியையும் செய்யாமல் இருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல பார்வைக்கும் சலிப்பு மிகுந்தவர்களாய் விரக்தி அடைந்தவர்களாய் தோற்றமளிக்கின்றனர். இப்படித் தமக்கு அதிர்ஷ்டம் இல்லை என்று எண்ணுகிறவர்களால் ஒருக்காலும் முன்னுக்கு வரமுடியாது.

வாழ்க்கையில் மேலும் மேலும் வெற்றிகளை அடைந்து வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் ஒருவரைச் சந்தித்து உங்கள் முன்னேற்றத்திற்குக் காரணம் அதிர்ஷ்டந்தானே? என்று கேளுங்கள். அவர் உங்களைச் சும்மா விடமாட்டார் சண்டைக்கு வந்துவிடுவர்.

எதையும் முன்கூட்டி யோசித்தல், செயல் முறைகளில் திறமை, கடுமையான உழைப்பு ஆகியவையே என் வெற்றிகளுக்குக் காரணம் என்று அவர் சொல்வார்.

அத்தகைய வெற்றிக்குத்தான் அதிர்ஷ்டம் என்று பெயர் என்று உங்களுள் சிலர் நம்பினால் நாமும் அவர் கூறியவற்றைப் பின்பற்ற வேண்டும்.

இத்தயை அதிர்ஷ்டம் தானாக வராது நாம்தான் தேடிக்கொள்ள வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## வீரச்செயல்!

முன்னொரு காலத்தில் ரத்தினபுரி நாட்டை ஆண்டு வந்த அரசர், தன் மந்திரி வர்ணனிடம் பேசிக் கொண்டு இருந்தார். அவர்களின் பேச்சு அறிவுக்கூர்மை பற்றி இருந்தது.

"அறிவுக்கூர்மை உடையவர்களால் எதையும் செய்து முடிக்க முடியும்.

அவர்களால் செய்ய இயலாத செயலே இல்லை" என்று கூறினான் மந்திரி. அவன் கருத்தை அரசர் ஒப்புக் கொள்ளவில்லை.


"அரசே! செய்ய இயலாத செயல் ஒன்றைச் சொல்லுங்கள் நான் அதைச் செய்து காட்டுகிறேன்" என்றான் மந்திரி!

"மந்திரியே! நீ ஏதேனும் வீரச் செயல் செய்யப் போவதாகச் சொல்ல வேண்டும். அதற்காக மக்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

அதைச் செய்யாமல் அவர்களிடமிருந்து தப்பிக்க வேண்டும். உன்னால் முடியுமா?" என்றார் அரசர்.

"அரசே! மிக எளிய செயலைத்தான் சொல்லியிருக்கிறீர்!" என்றான் மந்திரி.

"மந்திரியாரே! நீ நினைப்பது போல் இது எளிய செயல் அல்ல. வீரச் செயல் செய்வதாகச் சொல்லி, மக்களின் கூட்டத்தைக் கூட்டுவது எளிது. பிறகு அதைச் செய்யாவிட்டால்,



அந்தக் கூட்டம் உன்னைத் தப்பிக்க விடாது. நீ அவமானப்படத்தான் போகிறாய்" என்றார்.

"அரசே! இதில் எனக்கு எந்த அவமானமும் ஏற்படாது. பொறுத்திருந்து பாருங்கள்" என்ற மந்திரி அங்கிருந்து சென்றான். சில நாட்கள் சென்றன.

மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைப் பார்த்தார் அரசர். வியப்படைந்த அவர் தன் வேலையாட்களிடம், "மக்கள் கூட்டமாக எங்கே செல்கின்றனர்?" என்று கேட்டார்.

"அரசே! எல்லோரும் கோயிலை நோக்கிச் செல்கின்றனர். அங்கே கோபுரத்தின் உச்சியில் மந்திரி நின்று கொண்டிருக்கிறார்.

இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன் என்று கத்திக் கொண்டிருக்கிறார்.

(தொடரும்)

# மகாபாரதம்

பின் பூனை எலியை நோக்கி "ஆபத்தில் உதவி செய்தவரே நானும் எனது உறவினர்களும் உன்னை கௌரவிக்க விரும்புகிறோம். என் சொத்து உனக்கே உரியது. என்னிடம் உனக்கு பயம் வேண்டாம். பயப்படாமல் வா" என்றது.




பூனையின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட எலி "உமது பாசமொழிகள் கேட்டு மகிழ்ச்சி. ஆனாலும் ஒன்று சொல்கிறேன். நண்பர், பகைவர் பற்றி ஆறாய்ந்து அறிந்து கொள்ள வேண்டும் என்பர் சான்றோர்.

நண்பர் பகைவர் போலவும், பகைவர் நண்பர் போலவும் தோற்றம் அளிக்கலாம். இந்தப் பகையும், நட்பும் நிலையானது அல்ல. ஏதோ ஒரு நோக்கத்தைக் கொண்டு தான் நட்பும், பகையும் அமைகின்றன. செயலின் நுட்பத்தை அறியாமல் நண்பர்களிடம் அளவு கடந்த நம்பிக்கை கொள்வதும் பகைவரிடம் அளவு கடந்த அவநம்பிக்கை கொள்வதும் ஆபத்தில் முடியும்.

என்னிடம் தாங்கள் பேசும் ஆசை வார்த்தைகளுக்குக் காரணம் உண்டு. மனிதன், ஏதோ ஒரு காரணம் கொண்டே நட்புடன் திகழ்கிறான். ஒரு காரணத்தால் பகைவன் ஆகிறான்.

ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் கூடச் சுயநலம் காரணமாக அன்பு செய்வர். உலகில் காரணம் இன்றி அன்பு இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் உடன் பிறந்த சகோதரரும், மனைவியும் ஏதோ ஒரு காரணத்தால் அன்பு கொண்டாலும் நாளாவட்டத்தில் அன்பு உடையவர்களாக ஆவர். உலகில் ஏதோ காரணத்தால்தான் அன்பு ஏற்படுகிறது.

அந்தக் காரணம் மறந்ததும் அன்பும் மறைகிறது. என்னைச் சாப்பிட வேண்டும் என்னும் காரணத்தால்தான் உமக்கு என் மீது அன்பு ஏற்பட்டுள்ளது.

ஆகவே உமது பேச்சில் எனக்கு நம்பிக்கை இல்லை. இச்சமயத்தில் உம்மிடம் நட்புக் கொள்வது அறிவுடைமையாகத் தோன்றவில்லை.

இயற்கையாகவே தாங்கள் எங்கள் குலத்திற்கு விரோதி ஆவீர். ஏதோ ஒரு முறை ஏற்பட்ட நட்பை மறந்து விடுக. பகையை மேற்கொள்க. பழம் பகையை மறக்கக் கூடாது. (தொடரும்)

நுகத்தடியில்லாத வண்டியையும் கடிவாள மில்லாத குதிரையையும் செலுத்த இயலாது.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# மூடர்காள்! தீ மூட்டக் கொதிநீர் உதவுமோ!

ஐயா! விறகு கட்டையை தீ மூட்ட முடிய வில்லை. சற்று மண்ணெண்ணெய் தாருங்கள் என்றால், மண்ணெண்ணெய் தர முடியாது வேண்டுமானால் அடுப்பில் நல்ல கொதி நீர் இருக்கிறது. அதனை விறகில் ஊற்றி நெருப்பைப் பற்ற வையுங்கள் என்று யாரேனும் கூறினால், அவர்களை விட்ட மூடர்கள் யார் இருக்க முடியும்.

ஆனால் விறகைப் பற்றவைக்க மண்ணெண்ணெய் தாருங்கள் என்று கேட்கின்றவர்களுக்கு நல்ல கொதி நீர் தரலாம் என்று சொல்லத்தக்கவர்கள் இருக்கின்ற இந்த நாட்டில் யார்தான் என்ன செய்ய முடியும்.

அந்தோ! வறுமையும் நோயும் பிணியும் சூழ்ந்துள்ள இந்தவேளையில், பொதுமக்களுக்கு நிதியும் நிவாரண உதவியும் வழங்க வேண்டியது அரசின் தார்மீகக் கடமையாகும்.

அதிலும் கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் ஏழை மக்களின் சீவனோபாயம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் நிவாரண உதவிகளைத் தான் வழங்கவில்லை என்றால்கூடப்பரவாயில்லை. மாறாக பொருட்களின் விலைகளேனும் கட்டுப்பாட்டில் இருக்குமென்றால் அதுவும் இல்லை.

அத்தனை பொருட்களின் விலைகளும் கண்டபாட்டில் எகிறிக் கொள்கிறது.

அந்தோ! எப்படிச் சீவியம் நடத்த முடியும் என்று மக்கள் ஏங்கித் தவிக்கின்ற நேரத்தில், ஆளுந்தரப்பு அமைச்சர்கள் சிலர் தெரிவிக்கின்ற கருத்துக்களைப் பார்க்கும்போது இவர்கள் எல்லாம் மனித வர்க்கத்தில் சேர்க்கப் படக் கூடியவர்களா? என்ற சந்தேகம் எழு கிறது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து போகிறது என்றால், அதனைத் தடுப்பதற்கான வழி பொருட்களின் விலைகளை ஏற்றுவது என்று யார் தீர்மானித்தாலும் அவர்கள் மக்கள் ஆட்சிக்குரிய அடிப்படை இயல்பைக் கொண்டவர்கள் அல்ல என்பதுதான் நீறுதிட்டமான உண்மை.

பொருளாதாரத்தில் நாடு பின்தங்கிவிட்டது என்றால்; அதற்கான உபாயம் உற்பத்திகளை அதிகரிப்பதாக, ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை ஊக்குவிப்பதாக, முதலீட்டாளர்களை உற்சாகப்படுத்துவதாகவே அரசின் செயற்பாடுகள் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து விட்டது. எனவே அதனைச் சரிக்கட்ட பொருட்களின் விலைகளை அதீதமாக உயர்த்துங்கள். பணத்தாள்களை நினைத்த படி அச்சிட்டு வெளியிடுங்கள் என்றால்,

விறகெரிக்க கொதிநீர் கொடுக்கும் கதையாகவே நிலைமை அமையும்.

# வவுனியா விபத்தில் பெண் படுகாயம்

(வவுனியா)

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6.40 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி சென்று கொண்டிருந்த உழவியந்திரம் புதிய சாளம்பைக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது அதே திசையில் பின்புறமாக பயணித்த பிளசர் ரக மோட்டார் சைக்கிள் உழவியந்திரத்தை முந்திச்செல்ல முற்பட்ட போது உழவியந்திரத்தின் பின்பகுதியிலுள்ள கலப்பையில் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வெளிக்குளத்தை சேர்ந்த 34 வயதுடைய பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,299)

### யாழ். போதனா வைத்தியசாலைக்கு

# கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்றையதினம் விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான கனடா நாட்டு உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் யாழில் பல்வேறு தரப்பினரை நேரில் சந்தித்தார்.

அந்நிலையில் நேற்றையதினம் மாலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தியை சந்தித்தார்.

அதன்போது, வைத்திய சேவைகள் மற்றும் கொரோனா நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

(ம-3,18,33,101)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** வல்லான், ஆலடிச் சந்தி, இறுப்பிட்டி, கேரதீவு, குறிகாட்டுவான், மடத்துவெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** தேவிபுரம் 18 ஆவது வி.ஐ. ஆர். இராணுவ முகாம், இரணைப்பாலை 68 ஆம் பிரிவு இராணுவமுகாம், இரணைப் பாலை 68 ஆவது பிரிவு- டயலொக் கோபுரம், தேவிபுரம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும். (4-5)

# நவராத்திரி பாமாலை



வீணை மீட்கும் கையிரண்டில்
வினைகள் தீர்க்கும் பலம் இருக்கும்
காலை தென்றல் காற்றில் ஆடும்
கமல மலரில் குடியிருக்கும்
கலைகள் பலவும் அருளும் தாயே
இசையின் அரசி கலைமகளே
காலப்பகையோ நோயின் கொடுமை
கலங்கி நிற்கும் எமது மக்கள்
வலிகள் தீர்த்து வல்லமை சேர்த்து
பாசத் தோழர் ஒன்றுகூடும்
பாடம் கற்கும் கூடம் திறக்கும்
நாளை அருள வேண்டுகின்றேன்

**ரண்குமார் மதுசுதன்**
**தரம்-11A**
**மு/ வற்றாப்பளை**
**மகா வித்தியாலயம்**

அம்மா கலைவாணியே!
எமக்கு அருள்வாய் நீயே!
கொரோனாவில் தொடங்கி
அது பரவலாகி, டெல்டாவாகி
இவ் வைரஸ் எல்லாம் இல்லாமை ஆக்கி
எமது கல்வியை மீண்டும்
பள்ளியிலே தொடர்ந்து பயில துணைபுரிவாயே!
இவ் அகிலத்தை சிறப்பித்து நன்மை பெற
உன் கடைக்கண் பார்வையால் அருள் புரிவீரே!

**த.வைஷ்ணவி,**
**தரம்-06,**
**யா/ விக்ரோறியா கல்லூரி.**

**அன்பு மாணவச் செல்வங்களே!**
**நவராத்திரி பாமாலையில் உங்கள் கவிதைகள் இடம்பெற வேண்டும் எனில் உங்கள் கவிதைகளுடன் முழுப்பெயர், பாடசாலையின் பெயர், தரம் என்பவற்றை இட்டு**


**076 636 3378**

**என்ற வைபர் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

## மருத்துவக் குறிப்பு

திராட்சைப் பழத்தைச் சாறு பிழிந்து சாப்பிட ஒற்றைத் தலைவலி குணமாவதுடன் உடல் வலி நீங்கி உடலும் பலம் பெறும்.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

சில நாட்கள் கழிந்தன. அந்தப் பாம்பு யாரையும் கடிக்க வருவதில்லை என்பதைச் சிறுவர்கள் கண்டுகொண்டனர். கல்லெறிந்தாலும் அது ஒன்றும் செய்யவில்லை. மண் புழுவைப் போல் கிடந்தது. ஒருநாள் சிறுவன் ஒருவன் அதன் வாலைப் பிடித்து தூக்கிச் சுழற்றி தரையில் அடித்தான். அதன் வாயிலிருந்து இரத்தம் பீறிட்டது. சுரணையற்று வீழ்ந்தது. அதனிடம் அசைவோ நெளிவோ இல்லை. எனவே அது இறந்துவிட்டது என்று எண்ணி சிறுவர்கள் போய்விட்டனர்.

"இரவு வெகுநேரம் சென்ற பிறகு பாம்பிற்கு உணர்வு வந்தது. மிகுந்த சிரமத்துடன் மெல்லமெல்ல நகர்ந்து அது தன் வளைக்குள் சென்றது. அதன் உடம்பெல்லாம் சின்னாபின்னமாகிவிட்டது. அசையக்கூட அதனிடம் தெம்பில்லை.


(தொடரும்)

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

17



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



ஹமித் கர்சாய் 2001 - 2014
நாட்டின் தலைவர்

வன்முறை அச்சம் காரணமாக அவரது பிரச்சாரம் மட்டுப்படுத்தப் பட்டிருந்தாலும், குறிப்பிடத்தக்க சம்பவங்கள் இல்லாமல் தேர்தல்கள் நிறைவேற்றப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபையின் வாக்களிப்பு முறை கேடுகள் குறித்து விசாரணை நடத்தியதைத் தொடர்ந்து, நவம்பர் தொடக்கத்தில் தேசிய தேர்தல் ஆணையம் கர்சாய் வெற்றி பெற்றதாக அறிவித்தது. கிளர்ச்சி நடவடிக்கையின் அதிகரிப்பு இருந்த போதிலும் தேர்தல் பாதுகாப்பாக நடந்தது.

ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய குடியரசின் தலைவராக கர்சாய் 7 டிசெம்பர் 2004 அன்று காபூலில் நடந்த ஒரு சாதாரண விழாவில் பதவியேற்றார். போரினால் பாதிக்கப்பட்ட தேசத்திற்கு அடையாளமாக முக்கியமான "புதிய தொடக்கம்" என்று பலர் விழாவை விளக்கினர். பதவியேற்பு விழாவில் குறிப்பிடத்தக்க விருந்தினர்களாக நாட்டின் முன்னாள் மன்னர் ஜாஹிர்ஷா, மூன்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் மற்றும் அமெரிக்க துணைத் தலைவர் டிக்செனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

2004 தேர்தலில் ஒரு ஜனநாயக ஆணையை வென்றபிறகு, கர்சாய் 2005 ஆம் ஆண்டில் மிகவும் சீர்திருத்தவாதப் பாதையை பின்பற்றுவார் என்று கருதப்பட்டது. இருப்பினும், கர்சாய் எதிர்பார்த்ததை விட அதிக எச்சரிக்கையுடன் இருந்தார்.

2004 இல் அவரது புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பிறகு, ஆப்கானிஸ்தானின் பொருளாதாரம் பல ஆண்டுகளில் முதல் முறையாக வேகமாக வளரத் தொடங்கியது. அரசாங்க வருவாய் ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. இருப்பினும் அது வெளிநாட்டு உதவியை பெரிதும் சார்ந்தே இருந்தது.

மே 2006, ஹெல்மாண்டுக்கு பிரிட்டிஷ் துருப்புகள் அனுப்பப்பட்டன. ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில் உள்ள தலிபான் ஆக்கிரமிப்புப் பகுதியான ஹெல்மாண்ட் மாகாணத்தில் பிரிட்டிஷ் படைகள் வந்திறங்கின.

மறுசீரமைப்புத் திட்டங்களுக்கு உதவுவதற்காகவே அவர்கள் வந்திருந்தார்கள் என்றாலும், போர் அவர்களை இழுத்துக்கொண்டது. 450 பிரிட்டிஷ் வீரர்கள் இறந்தனர்.

மே 2006, ஹெல்மாண்டுக்கு பிரிட்டிஷ் துருப்புகள் அனுப்பப்பட்டன. ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில் உள்ள தலிபான் ஆக்கிரமிப்புப் பகுதியான ஹெல்மாண்ட் மாகாணத்தில் பிரிட்டிஷ் படைகள் வந்திறங்கின. மறுசீரமைப்புத் திட்டங்களுக்கு உதவுவதற்காகவே அவர்கள் வந்திருந்தார்கள் என்றாலும், போர் அவர்களை இழுத்துக்கொண்டது. 450 பிரிட்டிஷ் வீரர்கள் இறந்தனர்.

செப்டெம்பர் 2006 இல், ஆப்கானிஸ்தான் பயங்கரவாதத்தின் "மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக " மாறிவிட்டது என்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கர்சாய் கூறினார். கர்சாய் தனது நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்கி வருவதாகவும், பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக தீவிரவாதிகள் எல்லைக்குள் ஊடுருவிவருவதாகவும் கூறினார்.

"ஆப்கானிஸ்தானுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பயங்கரவாத சரணாலயங்களை அழிக்க சர்வதேச சமூகத்தின் உதவியை அவர் கோரினார். "நீங்கள் ஆப்கானிஸ்தானைத் தாண்டி பயங்கரவாதத்தின் ஆதாரங்களைப் பார்க்க வேண்டும்," என்று அவர் ஐ.நா. கேட்டுக் கொண்டார். இந்த நடவடிக்கைகள் ஆயிரக் கணக்கான ஆப்கானிஸ்தான் குழந்தைகளின் கல்விக்கான உரிமையை பறிப்பதுடன், ஆப்கானிஸ்தானில் சுகாதார பணியாளர்கள் தங்கள் வேலைகளை செய்வதைத் தடுக்கிறது.

கூடுதலாக, அவர் தனது நாட்டில் அபின்-பாப்பி சாகுபடியை அகற்றுவதாக உறுதியளித்தார், நேட்டோ படைகள் குடியிருப்புப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை நடத்தும் போது பொது மக்கள் உயிரிழப்பைத் தவிர்க்க அதிக அக்கறை எடுக்க வேண்டும் என்று அவர் பல முறை கோரியுள்ளார். செப்டெம்பர் 2006 வீடியோ ஒளிபரப்பில், கர்சாய் ஈராக் போரில் வீணடிக்கப்பட்ட பணத்தை ஆப்கானிஸ்தானை மீண்டும் கட்டியெழுப்ப செலவழித்திருந்தால், அவருடைய நாடு "ஒரு வருடத்திற்குள் சொர்க்கத்தில் இருந்திருக்கும்" என்று கூறியிருந்தார்.

செப்டம்பர் 2006 வீடியோ ஒளிபரப்பில், கர்சாய் ஈராக் போரில் வீணடிக்கப்பட்ட பணத்தை ஆப்கானிஸ்தானை மீண்டும் கட்டியெழுப்ப செலவழித்திருந்தால், அவருடைய நாடு "ஒரு வருடத்திற்குள் சொர்க்கத்தில் இருந்திருக்கும்" என்று கூறியிருந்தார்.

17 பெப்ரவரி 2009, ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்படும் படை வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஒப்புதல் அளித்தார். அதிகபட்சம் 1,40,000 வீரர்கள் வரை இருந்தனர். ஈராக்கில் அமெரிக்கா கையாண்ட யுத்தி இங்கும் பின்பற்றப்பட்டது. பொதுமக்களைப் பாதுகாப்பதோடு ஊடுருவும் படைகளைக் கொல்வதாகவும் இது வடிவமைக்கப்பட்டிருந்தது.

20 ஓகஸ்ட் 2009 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, கர்சாய் மிகவும் பிரபலமற்றவராகத் தோன்றிய போதும் அவரே, தேர்தலில் வெற்றி பெற்றார். பாதுகாப்பு இல்லாத, குறைந்த வாக்காளர் எண்ணிக்கை மற்றும் பரவலான வாக்குப்பதிவு, மிரட்டல் மற்றும் பிற தேர்தல் மோசடிகளால் தேர்தல் கறை படிந்த இந்த இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில், கர்சாய் 50% வாக்குகளைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

20 ஓகஸ்ட் 2009 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, கர்சாய் மிகவும் பிரபலமற்றவராகத் தோன்றிய போதும் அவரே, பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெல்ல வாய்ப்பிருந்தது. பாதுகாப்பு இல்லாத, குறைந்த வாக்காளர் எண்ணிக்கை மற்றும் பரவலான வாக்குப்பதிவு, மிரட்டல் மற்றும் பிற தேர்தல் மோசடிகளால் தேர்தல் கறை படிந்த இந்த இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில், கர்சாய் 50% வாக்குகளைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, 7 நவம்பர் 2009 அன்று இரண்டாவது சுற்று வாக்கெடுப்புக்கான அழைப்பை கர்சாய் ஏற்றுக் கொண்டார். 2 நவம்பர் 2009 அன்று, கர்சாயினை எதிர்த்து போட்டியிட்ட அப்துல்லா போட்டியில் இருந்து விலகினார். அவர் விலகியதால் தேர்தல் அதிகாரிகள் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பை செய்வதாக அறிவித்தனர். மீதமுள்ள ஒரே போட்டி யாளரான கர்சாய் சில காலம் கழித்து வெற்றியாளராக அறிவிக்கப் பட்டார்.

கர்சாய் தனது முதல் 24 அமைச்சரவை உறுப்பினர்களின் பட்டியலை 19 டிசெம்பர் 2009 அன்று ஆப்கான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார் இருப்பினும், 2 ஜனவரி 2010 அன்று, பாராளுமன்றம் இவற்றில் 17 பெயர்களை நிராகரித்தது. பெரும்பாலான வேட்பாளர்கள் அவர்களின் திறமை தவிர வேறு காரணங்களுக்காக (இனம் அல்லது இலஞ்சம் அல்லது பணத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்) தேர்ந்தெடுக்கப் பட்டதால் நிராகரிக்கப்பட்டனர்.

2 மே 2011, ஒஸாமா பின்லேடன் கொல்லப்பட்டார். பாகிஸ்தானில் உள்ள அபோட்டாபாதில் ஒரு கட்டடத்தில் பதுங்கியிருந்த அல் கொய்தா தலைவர் ஒஸாமா பின்லேடன் அமெரிக்க படைகளால் கொல்லப்பட்டார்.

அவரது உடல் கைப்பற்றப்பட்டு கடலில் அடக்கம் செய்யப்பட்டது. சி.ஐ.ஏ நடத்திய 10 வருடத் தேடல் முடிவுக்கு வந்தது. தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தானை நம்ப முடியாது என்று அமெரிக்கா குற்றம்சாட்டி வந்தது. ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானில் வசித்த தகவல் இதை மேலும் உறுதிப் படுத்துவதுபோல் இருந்தது.

2 மே 2011, ஒஸாமா பின்லேடன் கொல்லப்பட்டார். பாகிஸ்தானில் உள்ள அபோட்டாபாதில் ஒரு கட்டடத்தில் பதுங்கியிருந்த அல்கொய்தா தலைவர் ஒஸாமா பின்லேடன் அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டார். அவரது உடல் கைப்பற்றப்பட்டு கடலில் அடக்கம் செய்யப்பட்டது.

கர்சாய்க்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் எப்போதும் நட்பாக இருந்தன. குறிப்பாக பாகிஸ்தானில் ஒஸாமா பின்லேடனின் மரணத்திற்குப் பிறகு ஆப்கானிஸ்தான் - இந்திய உறவுகள் 2011 இல் வலுவடையத் தொடங்கின.

(தொடரும்...)

## பெற்றோல்...

நிலையில் எரிபொருளுக்கும் விலை அதிகரிப்பு ஏற்படக்கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

லங்கா - இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் தமது பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளை அதிகரிக்க எதிர்பார்த்திருப்பதாக அறிவித்துள்ளது.

இதற்கமைய பெற்றோலின் விலையை 15 ரூபாயினாலும், டீசலின் விலையினை 25 ரூபாயினாலும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் முடிவின் பின்னரேயே இறுதி முடிவு குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் அந்த நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பெரிய வெங்...

அதிகரித்து வரும் நிலையில், தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று ஒரு கிலோ உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை 150 ரூபாயாக அதிகரித்து காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கு 40 ரூபாய் வரியை விதிக்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்த நிலையில், உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை இவ்வாறு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில நாட்களில் ஒரு கிலோ உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை 200 ரூபாயாக அதிகரிக்கக்கூடும் என தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.(ம-3)
















## 23 பேர்...

அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 377 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மதுச்சாலைகள்...

வித்துள்ளார்.

போயா தினத்தை முன்னிட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் போயா தினம் உட்பட இரு தினங்களுக்கு மதுபானசாலைகள் பூட்டப்படவுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்தியில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## மின்சார...

வேகமாக அதிகரிப்பதால் நாட்டில் ஒரு அலகு மின்சார உற்பத்திக்கான செலவு 4 ரூபாயினால் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் ஒரு மெட்ரிக் தொன் நிலக்கரியின் விலை 200 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இலங்கையின் மொத்த மின் உற்பத்தியில் 40 சதவீதம் நிலக்கரியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றது.

இந்த ஆண்டுக்கு தேவையான நிலக்கரி ஏற்கெனவே, இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர்.ரணதுங்க தெரிவித்தார்

எவ்வாறாயினும் சர்வதேச சந்தையில் நிலக்கரியின் விலை அதிகரித்துள்ளமையினால், அடுத்த ஆண்டு மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரிக்கக்கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனடிப்படையில் ஒரு அலகு மின்சார உற்பத்திக்கான செலவு 4 ரூபாயினால் அதிகரிக்கக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## விலை உயர்...

பரவலாக விமர்சிக்கப்பட்டதாக தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதன்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு தற்போதைய நிலைவரம் தொடர்பில் அறிவுறுத்தியுள்ளார்.

அதேபோன்று, பொதுமக்கள் அதிக வாழ்க்கைச் செலவைச் சுமப்பதால் அனைத்து செலவுகளையும் குறைக்குமாறு ஜனாதிபதி இதன்போது அமைச்சர்களுக்கும் பணிப்புரை விடுத்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்ற விவகாரத்தில் அமைச்சர் பசிலுக்கு எந்த மாற்றுவழியையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய புதிய முறைகளைக் கொண்டு வாருங்கள் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.(ம-3)

## பொருட்களின்...

அதிகரிக்கப்படுமாயின், அரசாங்கம் எதற்கு? என்று விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்றவர்கள் கேள்வி எழுப்பினார்கள். அவர்கள் தற்போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றார்களா? என்ற சந்தேகம் எழுகின்றது.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பதற்கான அதிகாரம் கறுப்புச்சந்தை முதலாளிகளிடம் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், அரசாங்கம் இயங்கவேண்டியதன் அவசியமென்ன? என்று அவர்களிடம் கேட்க விரும்புகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

மிகக்குறுகிய காலத்திற்குள் எரிவாயு, பால்மா, கோதுமை மா உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

அரிசி மாத்திரமன்றி, எரிவாயு மற்றும் பால்மா உள்ளிட்ட ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளையும் தமக்கு நெருக்கமான பெருவர்த்தகர்கள் தீர்மானிக்கக்கூடியவாறான நிலைமையை அரசாங்கம் தற்போது உருவாக்கியிருக்கின்றது என்று குற்றம் சுமத்தினார். (ம-3)

## வடக்கு...

வர்கள் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதில் பெண் ஒருவரும் இரு குழந்தைகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## விலை உயர்வுக்கு...

நிலைப்படுத்தி கொழும்பில் நேற்றைய தினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டமானது முன்னிலை சோசலிச கட்சியின் ஏற்பாட்டில் லிப்டன் சுற்றுவட்டத்தில் இடம்பெற்றது.

இதன்போது போராட்டக்காரர்கள் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் முறையற்ற அரச நிர்வாகத்திற்கு எதிரான பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறு இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வவுனி...

னர் தெரிவித்துள்ளனர்.

மேலும், கோவிட் தொற்று காரணமாக குருமன்காடு பகுதியைச் சேர்ந்த 87 வயதுடைய பெண் ஒருவரும் அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த 85 வயதுடைய பெண் ஒருவரும் என இருவர் மரணமடைந்துள்ளனர். (ம-3)

## அதி...

பாதிக்கப்படக்கூடும் என்பதை கருத்திற் கொண்டு இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் - அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வு பெற்றுக் கொடுப்போம். அமைச்சரவை உபகுழு அறிக்கையின் பரிந்துரைகள் முழுமையாக செயற்படுத்தப்படும். எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கத்தினருக்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

## அமைதியான...

இதன்போது, வட பகுதி கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்த பிரச்சினைக்கான தீர்வு குறித்து துறைக்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளதாகவும், பிரச்சினைக்கு சுமூகமான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணத்தை மையப்படுத்தி விவசாயம், கல்வி, காலநிலை மாற்றம் உள்ளிட்ட 53 விடயங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சிநிரல் ஒன்றின் அடிப்படையில் பணியாற்ற தான் திட்டமிட்டுள்ளதாகவும், வடமாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஜீவன் தியாகராஜா குறித்த செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## நாட்டில் பஞ்சம்...

சுக்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வருடத்திற்கான பாதீட்டில் முழு வருடத்திற்கும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)















# நாட்டில் நேற்று மேலும் 671 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 671 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 23, 558 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 527,735 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், நாட்டில் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13,354 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

# எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாடு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாடு எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும்செயற்பாட்டின்முதற்கட்டமாக 15 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பைசர் தடுப்பூசியை ஒரு தடவை மட்டும் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

முதலில் 19 வயதுடைய மாணவர்களுக்கும் அதன்பின்னர் 18 என்ற அடிப்படையில் 17, 16, 15 என கட்டம் கட்டமாக தடுப்பூசிகள் செலுத்தப்படும். மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகள் ஊடாக தடுப்பூசிகள் செலுத்தப்படும்.

குறித்த வயதுகளையுடைய பாடசாலைகளிலிருந்து இடைவிலகியவர்கள் தமது பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-03,33)

# அமெரிக்க நிறுவனத்துடன் அரசு இரகசிய ஒப்பந்தம்

## மின்சார சபை சேவையாளர் சங்கம்

(கொழும்பு)

அமெரிக்காவின் நிவ்போர்ட் நிறுவனத்துடன் அரசாங்கம் மின்சாரத்துறை சார்ந்த ஒப்பந்தம் ஒன்றை இரகசியமான முறையில் கைச்சாத்திட தீர்மானித்துள்ளது என மின்சார சேவையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வளங்களை நள்ளிரவில் அந்நியர்களுக்கு வழங்கும் அரசாங்கத்தின் செயற்பாடு வன்மையாக கண்டிக்கத்தக்கது.

யுகதனவி விவகாரத்தில் நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று குறிப்பிடும் அரசாங்கம் இதுவரையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் முழுவரைபையும் வெளிப்படுத்தவில்லை என மின்சாரசபை சேவையாளர் சங்கத்தின் தலைவர் ரஞ்சன் விஜயலால் தெரிவித்தார். (ம-03)

# தொல்பொருள் திணைக்களத்தின் சட்டவிரோத தொடர் அத்துமீறல்கள்

## நோர்வே, நெதர்லாந்து உயர்ஸ்தானிகர்களுக்கு தெளிவுபடுத்தினார் சாணக்கியன் எம்.பி

(மட்டக்களப்பு)

இலங்கைக்கான நோர்வே உயர்ஸ்தானிகர் மற்றும் நெதர்லாந்து உயர்ஸ்தானிகர் ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் சந்தித்து பேசியுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று (செவ்வாய்கிழமை) நண்பகல் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் காணி அபகரித்தல், சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மண் அகழ்வு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டதுடன், இதற்கான ஆதாரங்களுடன் கூடிய ஆவணமும் கையளிக்கப்பட்டது.

இதன்போது சாணக்கியன் விசேட கோரிக்கை ஒன்றினையும் முன்மொழிந்திருந்தார்.

குறிப்பாக தொல்பொருள் எனும் பெயரில் காணிகள் சூறையாடப்படுவதை தடுக்கும் நோக்குடன் தொல்பொருள் சம்பந்தமான செயற்பாடுகள் அனைத்தும் யுனெஸ்கோ அமைப்பின் ஊடாக சர்வதேச கண்காணிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இதன்மூலம் நாம் எதிர்கொள்ளும் சட்டவிரோத காணி அபகரிப்பு போன்ற பிரச்சினைகளை தடுக்க முடியும் என இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார். அத்துடன், இன்றைய குறித்த சந்திப்பானது சமகால அரசியல் பரிமாற்றத்துடன் முற்றுப்பெற்ற தாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-03)


## அமெரிக்க லொத்தர் விசா



2023ல் நீங்களும் அமெரிக்காவில்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

விரையுங்கள் பதிவுகள் ஆரம்பாகிவிட்டன (C-2791) 0768226244

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கின்றனர். | 18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

எம்மூடாக விசா வென்றவர்களின் விபரங்களை எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | புதுக்குடியிருப்பு | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt

## ஒத்துமாறல்

கொழும்பில் கடமையாற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற விரும்புகிறார். எனவே ஒத்துமாறல் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பில் கடமையாற்ற விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

☎-076 912 4143

## IMMEDIATE VACANCY
### Administrative Assistant



Duties
- Assisting Visa Applications
- Air Ticketing
- Office Administration

Requirements (C-2814)
- Fluent in English
- Relevant Experience
- Able to Handle Multiple Tasks Under Pressure Situations

Salary- 30'000/=

CIMS COLLEGE 0777068777
49A, Chappel lane, Jaffna ( near Jaffna Central college)

## கணக்கியல் கற்கை

AAT பட்டயக் கணக்கறிஞர், CMA, CIMA, ACCA ஆகிய கற்கை நெறிகளை யாழ்ப்பாணம் மற்றும் நெல்லியடி ஆகிய பகுதிகளில் நடாத்துவதற்கு பல வருடங்கள் அனுபவங் கொண்ட பட்டயக் கணக்கறிஞர் ஒருவர் விரும்புகிறார். அதுபற்றி ஓர் ஆய்வாக இந்த கற்கை நெறிகளை கற்க விரும்புவோர் தங்களைப் பற்றிய விபரங்களுடன் தாங்கள் கற்க விரும்பும் கற்கை நெறி, கட்டம், பாடங்கள் பற்றி எமக்கு அறிவிக்கலாம். (C-2813)

தொடர்புகளுக்கு

077 755 2284, 077 611 3992

accountingtutor21@yahoo.com

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

### ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (8228)

தொடர்பு: ராஜ் - 077 679 6623

## விரைவு பொதிகள் சேவை
### V2 TRAVELS
UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-2789)

0768226240 DHL

## உடனடி வேலை வாய்ப்பு

நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் வேலையை இழந்தோருக்கும் புதிதாக வேலை தேடுபவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்! எமது Enterpreneurs நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது. வட மாகாணத்தில் (கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம்) புதிதாக ஆரம்பிக்கவுள்ள 10 கிளைகளுக்கு 75 இற்கு மேற்பட்ட பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளதால் [ மேற்பார்வையாளர், அலுவலக உத்தியோகத்தர், வரவேற்பாளர், உதவி முகாமையாளர், கிளை முகாமையாளர் ] தங்களது தகுதிகாண் மூலப்பிரதிகளுடன் நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு உங்கள் தகுதிக்குரிய வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தரம் 10, O/L, A/L கல்வித் தகைமை உடையோர் கலந்துகொள்ளலாம். சம்பளம் நேர்முகத் தேர்வில் தீர்மானிக்கப்படும். (8227)

021 722 3317 | 077 384 7988 | 077 940 8007

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் புடவை காட்சியகத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றனர்.
- வாடிக்கையாளர் சேவை (Online)
- விற்பனையாளர்

( Salary - 20,000/= ) (8229)

☎-077 855 4840

## கனடாவில் உடனடி வேலைவாய்ப்பு

- Breakfast Attendant
- Office Admin
- Front Desk Agent
- Night Auditor
- Room Attendant
- Pool Attendant
- Housekeeping Supervisor
- Maintenance Worker
- Front Desk/Food Service Attendant
- Guest Service Manager

(C-2790)

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE ஆங்கில அறிவு



Hotel Management சம்பந்தமான அனுபவம் /கல்வித்து முன்னுரிமை வழங்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

0777-068-777

## பௌதிகவியல் Physics

2022, 2023 உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் (Physics)
- சகல அலகுகள்
- கடந்த கால வினாக்கள்

தனியாகவும்(personal), குழுவாகவும் கற்பிக்கப்படும். (8223)

✆-076 157 0107


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.